
# மேடு பள்ளங்கள்

**பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும், சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும், கோணலானவைகள் செவ்வையாகும், கரடானவைகள் சமமாகும் (லூக் 3:4)**



தேவன் நம் வாழ்வில் என்ன செய்ய சித்தங்கொண்டிருக்கிறாறோ அதை நமக்கு நம் இரட்சிப்பின் அனுபவ தொடக்கத்திலேயே சில நேரங்களில் வெளிப்படுத்துகிறார். ஆனால் அது நிறைவேற நம் வாழ்வில் நாம் மேடு பள்ளங்கள் போன்ற பல கடினமான அனுபவங்களை தாண்டிதான் அதை அடைய முடிகிறது. அதை அடையும் வரை நம் வாழ்வின் ஒவ்வொரு நாளும் நாம் அந்த இலக்கை நோக்கி தொடர தேவன் நம்மை பயிற்றுவிக்கிறார்.

தாவீது ஒரு நாள் இளைஞராய் இருந்த போது, சாமுவேலினால் தன் தகப்பன் வீட்டில், தன் சகோதரர் முன்னிலையில் ஆண்டவரால் இஸ்ரவேலின் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். ஆனால் அவர் அந்த இராஜ பதவியை அடைய எத்தனையோ வருடங்கள் ஆனது. வாழ்க்கையில் பல ஏற்ற தாழ்வுகள், இழப்புக்கள், கண்ணீரின் பாதைகள், சரீர பிரகாரமான போர்கள் என்று சொல்லி எத்தனையோ காரியங்களை எதிர்கொண்ட பின்னரே அவரை அரியணையில் ஆண்டவர் ஏற்றினார்.

யோசேப்பின் வாழ்விலும் இதுவே நடந்தது. அவர் அவருடைய தகப்பன் வீட்டில் வாலிப வயதில் இருக்கும் போதே, அவருக்கும் பிற்காலத்தில் தேவன் அவரை உயர்த்த போகிறார் என்பது வெளிப்படுத்த பட்டது. ஆனால் அது நிறைவேறுமளவும் அவர் தன் வாழ்க்கையில் பல வருடங்கள் பல்வேறு நிலைகளில் மேடு பள்ளங்கள் போன்ற வாழ்க்கை சூழ்நிலைகளை காண வேண்டிவந்தது. ஆபிரகாமுக்கும் ஆண்டவர் இதை போல அவர் வாழ்க்கையில் நடக்க போகும் ஒரு நன்மையை குறித்த, ஒரு திட்டத்தை வெளிப்படுத்தினார். அவருடைய சந்ததியார் எப்படி இருப்பார்கள் என்பதை

கூறினார். ஆனால் அந்த நன்மையான சந்ததியின் முதல் தலைமுறையான ஈசாக்கை பெற அவர் வெகு நாள் காத்திருக்க வேண்டியிருந்தது.

மேலும் புதிய ஏற்பாட்டிலும் ஆண்டவர் நமக்கு பரலோகத்தில் மகிமையான ஒரு ஸ்தலத்தை ஆயத்தபடுத்தி, ஒரு நாள் திரும்பவும் வந்து அழைத்து செல்வதாக வாக்களித்துள்ளார். எனவே ஆண்டவரை நம்பி வாழும் நம் ஒவ்வொருவர் வாழ்வும் ஒரு மகிமையான விதத்திலேயே முடிய போகிறது என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த வாழ்வை அடையும் வரை இவ்வுலகத்தில் மேடு பள்ளங்கள் போன்ற வாழ்வின் சூழ்நிலைகளுக்குள்ளாக நாம் கடந்து செல்ல வேண்டியது அவசியம். மேலும் இவ்வுலகத்திலேயே கூட நாம் சில நன்மைகளை அடைய நாம் காத்திருப்பது மட்டுமல்ல அதற்காகவும் சில கரடு முரடான பாதைகளை நாம் கடந்து செல்ல வேண்டியுள்ளது.

இதில் நாம் கற்று கொள்கிற ஒரு சத்தியம் என்னவென்றால், தாவீது இராஜாவாக, யோசேப்பு எகிபதிற்கு அவ்வளவு பெரிய அதிகாரியாக, ஆபிரகாவின் மூலமாய் ஒரு பெரிய சந்ததி உருவாக ஏதுவில்லாத காலத்தில் தேவன் கிருபையாக அவர்களுக்கு அந்த உயர்வை வாக்களித்தார். பிறகு அவர்கள் வாழ்வில் படிபடியாக தான் அவர்களுக்கு கிருபையாக அளித்த நிலைக்கு அவர்களை தகுதிபடுத்தி, ஒரு நாளில் அதை அவர்கள் வாழ்வில் நிறைவேற செய்தார். நமக்கு கிடைத்திருக்கும் இரட்சிப்பும், பாவ மன்னிப்பும், மகிமையான நித்திய வாழ்வும் நமக்கு ஆண்டவரின் மூலமாய் கிருபையாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆம் நம் பாவத்திற்காக அவர் பலியாகி, பாவிகளாகிய நம்மை நீதிமான்களாக்கி, நித்திய இராஜ்யத்திற்கு உட்படுத்தியது தேவனுடைய கிருபையே.

ஆனால் அந்த நித்திய இராஜ்யத்தில் பிரவேசிக்க அவர் நம்மை தகுதிபடுத்தி, பரிசுத்தபடுத்தின பிறகே அதில் பங்கடைய செய்வார். இது தேவனின் அநாதி ஞானத்தை வெளிப்படுத்துகிறது.. ஆம் நாம் பெற்றிருக்கிற, நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிற யாவும் தேவன் கிருபையாய் நமக்கு தந்ததே. ஆனால் அதே நேரத்தில் அவற்றின் நிறைவான பலனை பெற்று கொள்ள தேவன் நம்மிடம் அவருக்கு கீழ்படிந்து, நம்முடைய இலக்கு எதுவோ அதை நோக்கி எவ்வித மேடு பள்ளங்கள் வந்தாலும் தொடர்ந்து செல்ல எதிர்பார்க்கிறார். அதற்கான பெலனையும் அவரே நமக்கு தருகிறார். இதுவே தேவ கிருபையின் மகா மேன்மையான இரகசிய மாகும்.

எனவே நமக்கு கொடுக்கபட்டிருக்கும் இந்த மகிமையான காலத்தில், தேவ ஐக்கியத்தையும், தேவ உறவையுமே நாம் மேன்மையாக எண்ணி நித்திய இராஜ்யத்தில் நல்ல பங்கை பெற்றுக்கொள்ள நம்மை ஆயத்தப்படுத்தி கொள்ள வேண்டும். எனவே தான் இந்த மேன்மையான கிருபையை போக்கடிக்கிறவர்களை வேதம் கடுமையாக கண்டிக்கிறது. ஏனெனில் **"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின்**

**ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்."(எபி 10:26-29)**. தேவன் நமக்கு வைத்திருக்கும் நன்மையை குறித்த ஒரு அறிவை முன்கூட்டியே நமக்கு கொடுப்பதின் காரணம், நாம் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம், எப்படிப்பட்ட மகிமையான வாழ்வு நமக்கு கொடுக்கபட போகிறது என்பதையும், அதற்கு சற்றேனும் தகுதியில்லாத நமக்கு இந்த அருமையான வாழ்வை தேவன் கொடுக்கும் பொழுது, அதற்கு பங்குள்ளவர்களாக நம்மை தகுதிபடுத்தி கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதையும் நாம் உணர வேண்டும் என்பதற்காகவே.

எனவே ஆண்டவர், அவர் ஆட்டிவிக்கும் ஒரு பொம்மையை போல நம்மை நடத்தாமல், அவர் நமக்காக செய்த காரியங்களை, செய்ய இருக்கின்ற காரியங்களை நமக்கு வெளிப்படுத்தி, சுயசித்தத்தோடு அதற்கேற்ற ஒரு வாழ்க்கை வாழவே நம்மை அழைத்திருக்கிறார். எனவே நமக்கு கிடைத்திருக்கும் இந்த மகாமேன்மையான வாழ்வை நாம் ஜாக்கிரதையோடு, எப்படிப்பட்ட மேடு பள்ளங்கள் நம் வாழ்வில் வந்தாலும் அதை தேவ கிருபையோடு கடந்து மகிமையான நித்திய வாழ்வை பெற்றுக்கொள்வோமாக, ஆமென், அல்லேலூயா.